விலை ரூபா: 5.00 பக்கங்கள் எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (03.03.2002) தொலைபேசி 3378 ஒலி 74


மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு

சாரங்கா நகை மாடம்

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 2480

## பிரதமர் ரணிலின் அரசுக்கு ஆயுள் இரண்டு வருடம்!

### சந்திரிகா அம்மையார் ஆரூடம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆயுட்காலம் இன்னும் இரண்டு வருடங்களே நீடிக்கும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆரூடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள் என்று நான் நம்பவில்லை. எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு வருடத்திற்குள் புதிய அரசாங்கத்தைக் கலைக்கும் நோக்கம் எனக்கில்லை. ஏனெனில், புதிய அரசின் போக்கும், நடவடிக்கைகளும் அது இன்னும் இரண்டு வருடத்தில் தானாகவே வீழ்ச்சி அடையும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது என்றும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார். (இ)

## தமிழக முதலமைச்சராக ஜெயா நேற்றுப் பதவியேற்பு

(சென்னை)



அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுத் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றார்.

ஜெயலலிதாவிற்கும் 26 அமைச்சர்களுக்கும் ஆளுநர் பி.என். ராமமோகன்ராவ் பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய ஒ. பன்னீர்ச் செல்வத்திற்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை, மது விலக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெயலலிதா மூன்றாவது தடவையாக தமிழக முதல்வராக பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-

# சமாதானத்தைக் குழப்ப ஜனாதிபதி சதி செய்கிறார்

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குற்றச்சாட்டு

(லண்டன்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையே நிரந்தர யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தும் வகையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறியடிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், அவரின் ஆலோசகரும் முன்னாள் வெளி விவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரும் சேர்ந்து சதி செய்கிறார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டுள்ள நிரந்தர போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கண்டித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதி எழுதிய கடிதம் தொடர்பாகவே மேற்கண்டவாறு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குற்றம்சாட்டி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அவ்வறிக்கையில்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள், அமெரிக்கா, இந்தியா மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பல வரவேற்று பாராட்டுத் தெரிவித்துள்ளன. இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜனாதிபதி சந்திரிகா மட்டும் எதிர்ப்பது வேடிக்கையாக உள்ளது. ஜனாதிபதியின் இத்தகைய தவறான பொறுப்பற்ற போக்கின் மூலம் சமாதானத்திற்கு அவர் பாதிப்பை ஏற்படுத்த முற்படுகின்றார் என்பது வெளிக்காட்டப்படுகின்றது.

(2ம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் கடத்தப்பட்ட சிறுமி

## புலிகளின் புலனாய்வுப்பிரிவால் மூதூரில் வைத்து மீட்பு!

(மூதூர்)

யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் செந்தில் என்பவரின் கடத்தப்பட்ட 4 வயது மகள் பிருந்தா நேற்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூரில் வைத்து புலிகளின் புலனாய்வுத் துறையினரால் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்க்கப்பட்டுள்ள சிறுமி பிருந்தா தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் உள்ள சிறுமி பிருந்தாவை பொறுப்பேற்று கூட்டி வருவதற்காக அவரது பேத்தியார் நேற்று மூதூருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

சிறுமி பிருந்தா கொட்டாஞ்சேனையில் உள்ள சென்யூயியஸ் தேவாலயத்திற்கு சமீபமாக உள்ள பாலர் பாடசாலையில் கல்வி கற்று விட்டு வரும்போதே கடத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஊழல் நிரூபிக்கப்பட்டால் தற்கொலை செய்வேன்

### சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நான் சமுர்த்தி அமைச்சராக இருந்த போது ஊழல் புரிந்தேன் என்பது கண்டுபிடிக்கப்பட்டு அது நிரூபிக்கப்படும் பட்சத்தில் என்னை நா்னே சுட்டுத் தற்கொலை செய்து கொள்வேன் என மீண்டும் சமுர்த்தி அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள எஸ்.பி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஐ.தே.க — பொ.ஐ.மு ஆதரவு!

(கொழும்பு)

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நாட்டின் இரு பிரதான கட்சிகளான ஐ.தே.கவும் பொ.ஐ.முன்னணியும் இணங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா மெல்போன் நகரில் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கூட்டத்தில் அமைச்சர் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்படும் சமாதானப் பேச்சுக்களை அவதானிப்பதற்கும், இந்திய இலங்கை உறவுகள் பற்றி பேச்சு நடத்துவதற்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சிங் அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## முன்னாள் பிரதமர் ரட்ணசிறி அரசியலுக்கு முழுக்கு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதாக தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து மனம் உடைந்த நிலையில் நாட்டை விட்டு வெளியேறியிருந்த அவர்

தற்போது தாய்லாந்தில் தங்கியிருந்து கொண்டு அரசியலில் இருந்து ஓய்வுபெறும் தனது முடிவை அறிவித்துள்ளதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (வ)

## ஜனாதிபதியை இன்று ஜே.வி.பி சந்திக்கும்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தடுத்து நிறுத்துவது குறித்து ஜே.வி.பி தலைவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் இன்று இரவு ஜனாதிபதியை சந்தித்து பேசவுள்ளனர். (வ)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

### சிஹல உறுமய நேற்று நடத்தியது

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர் ஒப்பந்தத்தை எதிர்த்து சிஹல உறுமய நேற்று கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கி ஊர்வலமாகச் சென்ற போது

(8ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

**தவறி விட்டது**

ஞானபாலசிங்கம் யாழினி என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.827571636V), விசேட அடையாள அட்டை (இல. 0903030028) என்பன யாழ். பஸ் நிலையத்திற்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் J. T. I. இல. 7பலாலி வீதி, யாழ்ப்பாணம் அல்லது J. T. I. 11/10B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

# வெளிநாட்டிலிருந்துயாழ்.வர பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம்

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து கொழும்புக்கு வருபவர்கள் வட பகுதிக்கு வருவதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டுமென பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து கொழும்புவந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வரும் பயணிகளே இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

## டீசல் களவு பிடிபட்டது

(பதுளை)

பதுளை பஸ் டிப்போவில் சாரதியும், நடத்துநரும் பஸ்ஸில் இருந்தடீசலைக் களவாக எடுக்கும் போது கையும் மெய்யுமாகப் பிடிபட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பதுளையில் இருந்து புத்தளத்திற்குப் போகும் பஸ்வண்டியிலேயே இந்த டீசல்களவு இடம்பெற்று வருவதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையில் குறிப்பிட்ட சாரதியும், நடத்துநரும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கருத்தரங்குகள்

(தென்மராட்சி)

சர்வதேச லயன்ஸ்கழகங்களின் 306 பி மாவட்டத்தின் பிராந்தியம் 9இன் பிராந்தியக் கருத்தரங்கு எதிர்வரும் 8 ஆம் திகதி ஊரெழு மேற்கு கணேசா வித்தியாலயத்திலும் பிராந்தியம் 10 இன் பிராந்தியக் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

இவ்விரு கருத்தரங்குகளிலும் மாவட்ட ஆளுநர் லயன் உபாலி சமரசிங்கவும், முதல் சீமாட்டி சாந்தினி சமரசிங்காவும் பிரதமவிருந்தினர்களாகப் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்.வருகைதரும்மாவட்ட ஆளுநர் இங்குள்ள லயன்ஸ் கழகங்களுக்கு விஜயம் செய்வதுடன், யுத்தத்தினால் சேதமடைந்த சாவகச்சேரி நகரையும் பார்வையிடுவார் என ஆளுநரின் விஜயத்துக்கு பொறுப்பானலயன்எஸ்.பத்மநாதன் தெரிவித்தார். (உ-77)

## மின் இணைப்பு

(அராலி)

சங்கரத்தைத் துணை விக் கிராமத்திற்கு மின் சாரம் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (உ-214)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலைகளின் கிரிக்கெட்சங்கம் நடத்தும் 15, 17 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் நாளை,

15 வயதின்கீழ் ஏ பிரிவில், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் விக்டோறியாக் கல்லூரி அணி மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்திலும்,

15 வயதின் கீழ் பி பிரிவில், யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்திலும்,

கொக்குவில் இந்துக்கல்லூரி அணி எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி அணி கொக்குவில்இந்துக்கல்லூரி மைதானத்திலும்,

17 வயதின்கீழ் பி பிரிவில் புனித பரியோவான் கல்லூரி அணி எதிர் யூனியன் கல்லூரி அணி புனித பரியோவான் கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ-3)

## மாட்சி நயப்பு அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலய ஸ்தாபகரும், சமூகசேவையாளருமான அமரர் இராசையா கந்தையா அவர்களின் மாட்சி நயப்பு அஞ்சலிக்கூட்டம் இன்று மாலை 3.00 மணிக்கு வித்தியாலய அதிபர் இ. சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் பல அறிஞர்கள் அஞ்சலியுரை நிகழ்த்த உள்ளனர், (இ)

## ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு
# ஊருண்டி அரச காணியில் வீடுகட்ட கடற்படை அனுமதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பிலுள்ள மக்களின் பொதுவான பிரச்சினைகளை ஆராயும் முகமாக நேற்று கலந்துரையாடல் ஒன்று பருத்தியடைப்பு கதிரேசன் சன சமூக நிலையத்தில் நடைபெற்றது.

வேலணைக் கடற்படை கட்டளை அதிகாரி நிஹால் சந்திரசிறி, கடற்படைபொது சன தொடர்பதிகாரி ரொனி பெரேரா, ஊர்காவற்றுறை பிரதேசசெயலக பிரதமஎழுதுநர் எஸ். ஜெயபாலன்மற்றும் மக்கள் ஜனநாயகப்பேரவைத் தலைவர் இ. இராமேஸ்வரன் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் ஊருண்டிக் கிராமத்தில் 12வருடத்திற்குமேலாக மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதித்தல், ஊருண்டி பாதையை பொது மக்கள் பாவனைக்கு திறந்துவிடல், மற்றும் இந்துமயானத்தை பயன்படுத்த அனுமதி வழங்கல் ஆகிய கோரிக்கைகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டன.

ஊருண்டியில் உள்ள அரச காணியில் வீடுகள் அமைப்பதற்கும் கடற்படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (இ- 75- 4)

## சமாதானத்தை

சமாதான உடன்பாட்டில் உள்ள விதிகள், நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிப்பதாக உள்ளதென ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளதில் எந்த வித உண்மையும் இல்லை.

இறைமை என்ற கோட்பாட்டை கதிர்காமர் தவறாகப் புரிந்து வைத்திருக்கின்றார். உண்மையில் இறைமை என்பது ஒரு அரசின்தெய்வீக உரிமை அல்ல. அது மக்களின் மகத்தான ஆட்சி அதிகாரத்தையே குறிக்கிறது.

தமிழர் தாயகத்தில் விடுதலைப்புலிகள் வசம் கட்டுப்பாட்டுப்பிரதேசங்கள் இருப்பதை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்கிறது. இது ஒரு சர்வதேச அங்கீகாரமாகவும் அமைந்துள்ளது.

இதனை சந்திரிகா குமாரதுங்காவினாலும் கதிர்காமரினாலும் ஜீரணிக்க முடியவில்லை.

கடந்த காலஅரசால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைகள், போர் நெருக்கடிகளை தவிர்த்து, தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை தோற்றுவிக்கும் நடைமுறை இவ் உடன்படிக்கையில் உள்ளது.

இதனை ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை இதனாலேயே வேறு திசைகளில் கதையை திருப்பி ஜனாதிபதி குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்.

தமிழ்மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க சமாதானப் பேச்சுக்களுக்கு ஏற்கமுடியாத நிபந்தனைகளை ஜனாதிபதி முன்வைத்த காரணத்தாலேயே 1994 மற்றும் 1995ம் ஆண்டுப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தது என்று தெரிவித்த ஆலோசகர் பாலசிங்கம்.

மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு, இயல்புநிலை தோன்றியதன்பின்னர், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டதும் பேச்சுக்கள் நிச்சயம் ஆரம்பமாகுமென்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (வ-இ)

## இளைஞர்கள் அட்டகாசம்

(இருபாலை)

இருபாலை கிழக்குப் பகுதிகளில் இரவு வேளைகளில் இளைஞர்களின் அட்டகாசத்தனம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாலை வேளைகளில் வீதியால் செல்லும் வயோதிபர்களை இவ் இளைஞர்கள் கண்டபடி தாக்குவதாகவும் அவர்களின் உடைமைகளைப் பறித்து வீசுவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவங்களைக் கட்டுப்படுத்த ஊர்ப்பொது அமைப்புகள் முன்வராதமை குறித்தும் மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (இ)

# சிவராத்திரி தினத்தன்று ஈழத்து சிதம்பரத்திற்கு விசேட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி தினத்தன்று காரை நகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ள விசேட பூசை வழிபாடுகளில் பக்தர்கள் கலந்து கொள்வதற்கும், மறு நாள் கசூர்னா கடலில் தீர்த்தம் ஆடுவதற்கும் வசதியாக விசேட பஸ் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரை நகர் சாலை முகாமையாளர் சு.சிவகுருநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், அன்றைய தினம் நண்பகல் 12.00மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் செல்லும் பஸ்கள் அனைத்தும் ஈழச்துச் சிதம்பரத்திற்குச் சென்றே வழமையான சேவையைத் தொடரும் பக்தர்கள்கூட்டத்திற்கேற்ப இரவும் சேவைகள் விஸ்தரிக்கப்படும்.

தீர்த்தத் தினத்தன்று காலை, யாழ்ப்பாணத்திலிருந்து வழமையாக காரைநகர் செல்லும் பஸ்கள் கசூர்னா கடற்கரைக்குச் சென்று சேவையைத் தொடரும், காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பும் போது மீண்டும் அங்கு சென்றே யாழ்ப்பாணம் செல்லும் என்றார். (எ-246)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரிப் பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் பிரிவுத் தேர்தலும் இன்று மு. ப. 10 மணிக்கு மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை மண்டபத்தில் பிரிவுத் தலைவர் செ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ)

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் நடத்தும் கல்வாரி இராகங்கள் 2- ‘காவியநாயகன்’ (திருப்பாடுகளின் காட்சிப் பாடல்கள்) ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவம், இன்று மாலை 5 மணிக்கு மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-104)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பொதுப் பட்டமளிப்பு விழா - 2002

யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்புவிழா எதிர்வரும் 2002 - 03 - 16ம் திகதி ஐந்து அமர்வுகளில் நடைபெறும்.

இபபட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு 2002 - 03 - 05ம் திகதி தொடக்கம் 2002 - 03 - 08ம் திகதி வரை காலை 9.30-12.00 மணி வரையும், மாலை 1.30-3.30 மணிவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச் சிட்டினைக் காண்பித்து பின்வரும் திகதிகளில் அங்கிகளை பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 2002.03.05 | காலை 9.30-12.00 | தொழில் நிர்வாகமாணி |
| | மாலை 01.30-03.30 | முதுதத்துவமாணி, முதுமெய்யியல்மாணி |
| 2002.03.06 | காலை 09.30-12-00 | வணிகமாணி |
| | மாலை 01.30-03.30 | விவசாய விஞ்ஞானமாணி, விஞ்ஞானமாணி |
| 2002.03.07 | காலை 09.30-12.00 | மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி |
| | மாலை 01.30-03.30 | நுண்கலைமாணி (இராமநாதன் நுண் கலைக்கழகம்) |
| 2002.03.08 | காலை 09.30-12.00 | கலைமாணி |
| | மாலை 01.30-03.30 | முதுகல்வியியல்மாணி |

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 35/-ஐ (போட்டோ ஒன்றுக்கு) பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திய பற்றுச்சிட்டினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
01.03.2002
(கி 3624)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

**திரு. க. கரன்**
(சுன்னாகம் ப. நோ. கூ. சங்க இலிகிதர்)

வலிமேற்கு பிரதேச செயலக கலாசார பேரவையின் ஸப்தஸ்வரங்களின் சங்கமம் நிகழ்வில் முத்துக் கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த திரு க. கரன் அவகர்ளின் ஓகன் (ORGAN) வாத்திய அரங்கேற்றம் இன்று நடைபெறுகின்றமையை பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் கலையார்வம் மேலும் சிறப்புற நல்வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

திரு. திருமதி சுரேஸ்குமார் குடும்பம்
திரு குமரவேல் ஜெயபிரணவன்
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(கி/3625)

# குடாநாட்டிலுள்ள 5 மக்கள் வங்கி கிளைகள் கணனிமயப்படுத்தப்படும்

## வாடிக்கையாளர் மத்தியில் பொது முகாமையாளர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்குகின்ற ஐந்து மக்கள் வங்கிக் கிளைகளும் இன்னமும் இருமாத காலத்தில் கணனிமயப் படுத்தப்படும்.

அண்மையில், யாழ்ப்பாணத்துக்கு இருநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த மக்கள் வங்கியின் நிறைவேற்று உத்தியோகத்தரும் பொதுமுகாமையாளருமான டிறெக் ஹெலிநேற்று முன்தினம் வடபிராந்தியபிரதேச அலுவலகத்தில் நடைபெற்றவங்கிவாடிக்கையாளர்களுடனான சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் தலைமையில் நடைபெற்ற சந்திப்பிற்கு ஒவ்வொரு வங்கிக்கிளை யில்இருந்தும்தெரிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இச்சந்திப்பில் பொது முகாமையாளர் டிறெக் ஹெலி தொடர்ந்து உரையாற்றும் போது:

யாழ்ப்பாணமாவட்டத்தில் மக்கள் வங்கியின் சேவைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகளைக்கண்டறிவதையும் ஊழியர்கள், வாடிக்கையாளர்களைச் சந்திக்கும் பொருட்டுமேயாழ்ப்பாணம்வந்தேன். மக்கள் வங்கி யாழ்ப்பாண மக்களுக்கு நல்ல சேவைகளை வழங்கி வருவதாக வாடிக்கையாளர் குறிப்பிட்டமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

வங்கி வாடிக்கையாளர்களுக்குத் துரிதமான சேவைகளை வழங்கும்பொருட்டு, யாழ்ப்பாணம்ஸ்ரான்லிவீதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகக்கிளை, சுன்னாகம்கிளை, கன்னாதிட்டிக் கிளை, யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கிளை ஆகிய ஐந்துகிளைகளும் விரைவில்கணனிமயப்படுத்தப்படவுள்ளன.

அதேவேளை, தற்போது நீடித்த கருமபீடங்களாக இயங்கி வரும் சங்கானை, அச்சுவேலி, பருத்தித்துறை ஆகிய மூன்றும் மிக விரைவில் முழுமை பெற்ற கிளைகளாகத் தரமுயர்த்தப்படும் எனவும் தெரிவித்தார்.

(உ-77)

# மத்திய கல்லூரி மாணவர் 45 பேர் இரத்த தானம்

(மானிப்பாய்)

யாழ். மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களால் நேற்று முன்தினம் பாடசாலையில் வைத்து இரத்ததானம் செய்யப்பட்டது.

இன்ரறக்ட் கழக சமுக நலன் திட்டத்தின் கீழ் இந் நிகழ்வு மத்திய கல்லூரியில் இடம்பெற்றபோது,

75 மாணவர்கள் இதற்கு முன்வந்த போதும் 45 பேர் மட்டுமேஇரத்ததானம்செய்ய தகுதியானவர்களாக இனம் காணப்பட்டு இரத்தம் பெறப்பட்டது.

(உ-232)

## கிணற்றினுள் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்தவர், மரணமான சம்பவம் நேற்று முன்தினம் அராலி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி புலேந்திரன் (வயது 49) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

(உ-104)

## மெய்வல்லுநர் போட்டி

(ஏழாலை)

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செல்வி சி. கெங்கா மலர்தேவியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(எ-12)

## முதியோர் இல்லம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைப் பணிப்பாளர் சபையினர், முதியோர் இல்லம் ஒன்றினை அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(உ)

## நிர்வாகசபை தெரிவு

(நவக்கிரி)

நல்லூர் இலங்கை நாயகி சனசமூக நிலையத்தின் நடப்பாண்டிற்கான நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் தலைவர் வே. நாகமுத்து தலைமையில் நடைபெற்றது.

தலைவராக வே. நாகமுத்து, செயலாளராக இ. சிவேந்திரராஜா, பொருளாளராக அ. ஜெயசிங்கம், உப தலைவராக வை. பாலசுப்பிரமணியம், உப செயலாளராக சி. நந்தகுமார் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக 8 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-233)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 50வதுஆண்டுநிறைவு விழாவைமுன்னிட்டு நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3.30 மணிக்கு சிந்து வி.க. எதிர் வைத்தீஸ்வரா வி.க. ஆகியன மோதவுள்ளன.

(உ-3)

## பத்திரிகையாளர் பயிற்சிநெறி இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவினால் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டு வரும் பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிநெறிஇன்று நடைபெறமாட்டாதென பிரிவின் செயலாளர் எஸ். மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

(உ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிஇந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உப அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு கோப்பாய். நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரிஇ. சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ-9)

## சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அச்சுவேலி வைத்தியசாலையில் கோப்பாய் பிரதேச செயலக அலுவர்கள், கிராம அலுவலர்கள் வைத்தியசாலை அலுவலர்கள், இணைந்து சிரமதானப் பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

(உ)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி, எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாக முதல் நாள் சனிக்கிழமை காலை 6 மணி முதல் மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி என்பன நடைபெறவுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கு வெவ்வேறாக இடம் பெறவுள்ள இப்போட்டிகளில்பங்கு பெறவுள்ள கோப்பாய் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்டவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தின் விளையாட்டு அலுவலரிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# நெடுந்தீவுக் கடலிலும் இந்திய மீனவர் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பு

(மந்திகை)

நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தொழிலில்ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மீனவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டாகநுழையும்இவர்கள் மாலை முதல் காலைவரை மீன்பிடித்து வருவதாகவும்,

இது குறித்து நெடுந்தீவு கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் யாழ். அரச அதிபரின் கவனத்தின் கீழும் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேபோன்று வடமாரட்சிக் கடலிலும் இந்தியமீனவர் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்து வருவதுகுறிப்பிடத்தக்கது.

(உ-23)

## சாவகச்சேரி கமநல நிலையம் மீளவும் அமைச்சரால் ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கமநல நிலையம், கடந்தபுதனன்று அமைச்சர் மகேஸ்வரனினால் மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்துள்ளதையடுத்து, அவர்களின் விவசாயம் சம்பந்தமான தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டு இந்நிலையம் மீளத் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இங்கு பசளை வகைகள், விவசாய உள்ளீடுகளைமக்கள் பெறுவதற்கேற்ற நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் தெரிவித்தார்.

(உ-19)

# சித்திர ஆசிரியர் பயிற்சி குழு யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

சித்திரம் மற்றும் ஆக்க வேலைகளுக்குப் பொறுப்பான அமைச்சின் கல்விப் பணிப்பாளர் துசாரகுணத்திலாவுடன் 16பேர் கொண்ட குழுவினர் எதிர் வரும்17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இக் குழுவில்ரூபாவாஹினி, சொர்ணவாஹினி ஆகிய செய்தி ஊடகங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

யாழ். மாவட்டத்தில் ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரை சித்திரம், ஆக்க வேலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இக் குழுவினர் 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை பயிற்சி வகுப்புக்களை நடத்துவார்கள்.

இவ் வகுப்புக்கள் தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(எ-19)

# சிறுவில்துறையில் வாடிவீடமைத்து தங்க கடற்படை அனுமதி

(ஊர்காவற்றுறை)

சின்னமடு கடற்றொழிலாளர் சங்கத்தினர், இலங்கை கடற்படையின் வேலணைக் கட்டளைத் தளபதி லெப்டினன் நிகால் சந்திரசிறி மற்றும் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ரொனிபேரேரா ஆகியோரைச் சந்தித்து தமதுநிலை தொடர்பாககலந்துரையாடினர்.

நேற்று முன்தினம் சின்னமடு றோ.க.த.க பாடசாலையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது,

அதிகாலை 1.00மணிமுதல் மீன்பிடிக்க அனுமதிப்பது,

சிறுவில் துறையில் வாடி அமைத்து தங்குவது,

மீன்பிடிக்கும் எல்லையை அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு உட்பட்ட பகுதிக்குள் வரையறுப்பது ஆகிய விடயங்களில் இணக்கம் காணப்பட்டது.

மக்கள் ஜனநாயகப் பேரவையின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வ. குணசீலன், மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பங்குகொண்டனர்.

(உ-3, 75)


'பொன் கீதாலயா'
இசைக்கலைஞர் மன்றம் நல்லூர்

**தெய்வீக ஒலிப்பேழை வெளியீட்டு விழா**

யாழ். மண்ணில் பிரசித்தி பெற்ற
ஆலயங்களின் புகழ்பாடும் பக்திப்பாடல்கள்

காலம்: 03 - 03-2002 ஞாயிறு பி.ப. 2.30 மணி
இடம்: யாழ். நல்லை ஆதீன இசை அரங்கம்
தலைவர்: கலாநிதி க. குணராசா அவர்கள்
(செங்கையாழியான்)

வரவேற்புரை:
செம்பியன் செல்வி மலர் - சின்னையா அவர்கள்
(ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்)

முதன்மை விருந்தினர்: ஒப்புரவாளர் பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வு பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)
உயர்திரு. பா. தவபாலன் ஜே. பி. யு. எம்
(சட்டத்தரணி - பிரசித்த நொத்தாரிஸ்)

கௌரவ விருந்தினர்:
கௌரவ க. மணிபல்லவராஜன் ஜே. பி. யு. எம்
(தலைவர் - நல்லூர் பிரதேசசபை)

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

இசை அமைப்பு:
எஸ். பொன்னுத்துரை அவர்கள்
(கலைஞான கேசரி இசைஅரசு)

அனைவரையும் இறையன்புடன்
அழைக்கின்றோம்

''பொன்கீதாலயா'' இசைக்கலைஞர் மன்றம்,
நல்லூர்.

(4754)

**சோதிட பலன்**

# உங்கள் பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பூரட்டாதி நட்சத்திரக் காரர்களுக்கு எப்போதும் அச்சுவினி நட்சத்திரம் நன்மைக்குரிய, நட்சத்திரமாகும். தாரை 4 க்கு சுகவிருத்தி, அதிபதி குரு. வாகனம், யானை அதிபதி குருவின் பலன் தைரியம், வாகனப்பலன் லக்ஷ்மி கடாட்சம், சந்திரன் பலன்- வளர்பிறைக் காலம்- அமாவாசை கழிந்த 2 வது நாள் எல்லா சுபகாரியங்களும் செய்யலாம். தொழில் ஆரம்பம் செய்ய, சினிமாப்படம் பூஜை போடுவதற்கு சிறப்பான நாள், திங்கட்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள் ராட்சதயோகம் உடைய நாள் என்பதால், எந்த சுப முயற்சிக்கும்உங்கள் பூரட்டாதி நட்சத்திரத்திற்கு ஆகாத நாள். இதை விலக்கவும். வியாழக்கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள்- மானசயோகம் உதய நாள். இது ராஜசன்மானத்தை உண்டாக்கும், எனவே, இந்த நாளில் எல்லா விதமான சுப முயற்சிகளிலும் ஈடுபடலாம். மனை முகூர்த்தம் செய்ய, புதுஇல்லம் குடிபுக, மற்றசுபங்களுக்கும்ஏற்ற நாள். சாலை மணி 6 00 முதல் 7 க்குள் குருவின்காலை ஓரையில் செய்யும் காரியமெல்லாம் நன்மைக்குரியதே, வெள்ளிக் கிழமையில் அச்சுவினி நட்சத்திரம் வரும்நாள்- ஆனந்தாதி யோகத்தின் வஜ்ர யோகம் உதயமாகும். இது உங்களுக்கு ஆகாத நாள் என்பதால் இதை விலக்கவும், பகல் மணி 1.00 முதல் 1.30 க்குள் எந்த சுபமும் செய்ய உத்தமம்.

பூரட்டாதி நட்சத்திரத்திற்கு வேதை (ஆகாத நட்சத்திரம்) - உத்தரம், திருமணம் செய்ய, தொழில் கூட்டு சேர்க்க, உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள் 6 (ரச்சு) அவைகள்- கார்த்திகை, புனர்பூசம், உத்தரம், விசாகம், உத்தராடம், பூரட்டாதி ஆகியவைகள். அதிர்ஷ்ட மலர் முல்லை, அனுகூல தெய்வம்- பிரம்மா, அதிர்ஷ்ட கல்- புஷ்பராகம் அல்லது கனக புஷ்பராகம், அதிர்ஷ்ட நிறம்- வெண் மஞ்சள், அதிர்ஷ்ட எண்- 7 -25.

உத்நரட்டாதி நட்சத்திரம்

உத்தாட்டாதி நட்சத்திரம் சனிக்குஉரிய 26 வது நட்சத்திரம். எப்போதும்உங்களுக்கு அத்தம் நட்சத்திரம் நன்மைக்குரியநட்சத்திரமாகும். தாரா பலன் 6 க்கு காரிபசித்தி. அதிபதி சந்திரன், வாகனம் ஐம்புகம், அதிபதி பலன் புகழ், வாகனப்பலன் சுகவிருத்தி. எப்போதும் அமாவாசை கழிந்த 7 வது நாள் எல்லா

## டாக்டர் எம். வி ராமன்

சோதிட வித்தகர்

சுபகாரியங்களும்செய்பலாம். உங்கள் உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு இந்த ஏழாம் சந்திரன் சிறப்பு நன்மைக்குரியது என்பதால், வாழ்நாள் முழுவதும் இதைக் கடைப்பிடிக்க சகலமும் சித்தியாகும். தொழில் ஆரம்பம் செய்ய, சினிமாப்படம் பூஜைக்கும், மற்ற சுப காரியங்களுக்கும் ஏற்றநாள். திங்கட்கிழமையில் அத்தம் நட்சத்திரம் வரும் நாள்- ஆனந்தாதி யோகத்தில் வஜ்ரயோகம் உதயம் ஆகும் நாள், உங்களுக்கு ஆகாதுஎன்பதால் இதைவிலக்கவும். வியாழக் கிழமையில் அத்த நட்சத்திரம் வரும்நாள் சித்தயோகம் ஆனந்தாதி யோகத்தில்இது ராட்சத யோகம் உடைய நாள். இந்த நாள் உங்கள் உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு ஏற்ற நாள் அல்ல என்பதால், எல்லா சுப காரியங்களுக்கும் விலக்குவது சிறப்பு. இந்தநாளில், இதே நட்சத்திரத்தில் காலைமணி 6 முதல் 7 க்குள் எந்தசுபமும் செய்யலாம். இது கௌரி பஞ்சாங்க காலம் உத்தியோக வேளை, குருஓரை உடையது. இத்துடன் சூரிய உதயநேரங்களைச் கூட்டிக்கொள்ளவும், வெள்ளிக்கிழமையில் அத்தம் நட்சத்திரம்வரும்நாள் அமிர்தயோகம் உதயமாகும். ஆனந்தாதியோகத்தில்அமிர்த யோகம் உள்ளநாள், இந்த நாளில் நீங்கள் உங்கள் வாழ்நாள்முழுவதும் எல்லா விதமான சுபகாரியங்கள் செய்யவும் ஏற்றநாள். தொழில் ஆரம்பம் செய்ய, கட்டடம் கடைக்கால் போடவும், புது இல்லம் குடிபுகவும், கல்யாணம் ஏற்கவும் மிகமிகச் சிறப்பான நாள். இந்த நாளில் அயல் நாடு தொடர்புக்கும், பெரிய பிரயாணத்தைமேற்கொள்ளவும் மிகவும் உயர்ந்த நாள் ஆகும். இதே நாளில் பகல் 1.00 மணி முதல்2.00 மணிக்குள் எல்லாசுபகாரியங்களுக்கும் ஏற்றநாள். சொத்து வாங்க, விற்க, தஸ்தாவேஜ்கள் எழுத, பாஸ்போட் வாங்க முயற்சிக்கவும். உத்தியோகத்திற்கு மனுப்போடவும் சிறப்பானநாள்.

உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு வேதைஆகாத நட்சத்திரம்பூசம். திருமணம் செய்ய, தொழில் கூட்டுச்சேர்க்க, உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள 6 (ரச்சு) அவைகள்- பரணி, பூசம், பூரம், அனுஷம், பூராடம், உத்திரட்டாதிஆகியவைசள். அதிர்ஷ்ட மலர்-கருங்குவளை, அனுகூல தெய்வம்-சனீஸ்வரன், அதிர்ஷ்டக்கல்-நீலக்கல், அதிர்ஷ்ட நிறம்-கருநீலம், அதிர்ஷ்ட எண்-8,26.

ரேவதி நட்சத்திரம்

உங்கள் நட்சத்திரம் புதனுக்குரிய 27வதுநட்சத்திரம்' உங்களுக்கு எப்போதும் நன்மைசெய்யும் நட்சத்திரம் அச்சுவினி. இதன் வியரம் -தாராபலன் 2க்கு சம்பத்து விருத்தி, அதிபதி புதன். வாகனம்- குதிரை, அதிபதி பலன் பிரகாசம் (ஒளி), வாகனப் பலன் அர்த்தஇலாபம், சந்திரன் பலன்-அமாவாசை கழிந்த 2வது நாள் எல்லா விதமான சுபங்கள் செய்பவும் ஏற்றநாள். வார நாட்களில் ஞாயிற்றுக்கிழமை அச்சுவினி நட்சத்திரம் வரும் நாள் சித்த யோகம் உதயமாகும். ஆனந்தாதி யோகத்தில் ஆனந்த யோகம் உள்ள நாள். இதன் பலன் திரவிய லாபம். இந்த நாளில் நீங்கள் வாழ்நாள் முழுவதும் எல்லா சுபகாரியங்கள் செய்யவும் ஏற்றநாள். காலை மணி 6 முதல் 8மணிக்குள் எல்லாவகையான சுபங்கள் செய்யவும் ஏற்றநாள். ஏற்ற காலம். இதை எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும். வியாழக்கிழமையில் ரேவதி நட்சத்திரம் வரும் நாள் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் உதயம். இதன்பலன் ராஜ சன்மானம். இந்த நாளை உங்கள் வாழ்நாள் முழுவதும் எல்லா சுபகாரியங்களுக்கும் பயன்படுத்தலாம். இந்த நாள் காலை 6 முதல் 7.15 க்குள் எல்லாவிதமான சுப நிகழ்ச்சிகளையும் வைத்துக் கொள்ள சிறப்பு நன்மைகள் கிடைக்கும். ரேவதி நட்சத்திரம் வெள்ளிக்கிழமையில் வரும் நாள் வஜ்ரயோகம் வரும். இது உங்களுக்கு நல்ல நாள் அல்ல. இதை விலக்கவும்.

ரேவதி நட்சத்திரகாரர்களுக்கு வேதை (ஆகாத நட்சத்திரம்)-மகம், திருமணம் செய்ய, தொழில் கூட்டு சேர்க்க உங்களுக்கு ஆகாத நட்சத்திரங்கள் 6 (ரச்சு), அவைகள்-அச்சுவினி, ஆயிலியம், மகம், கேட்டை, மூலம், ரேவதி ஆகியவைகள் நன்மை செய்யும் நட்சத்திர வரிசையில் உங்களுக்கு அச்சுவினி மட்டும் தான்வருகிறது. கேதுவின் நட்சத்திரங்களான மகம், மூலம் வரவில்லை. எனவே, வேதையாக வந்தாலும் அச்சுவினி மட்டும் திருமணம் செய்ய ஏற்றதாக எடுத்துக் கொள்ளலாம்.

(முற்றும்)

## இராசி பலன்

3- 3- 2002

(மாசி 19, ஞாயிறு)

பஞ்சமி வை 4.30 வரை
சித்திரை காலை 6.50 வரை
சுவாதி வை 5.38 வரை
ராகுகாலம்- 4.57-5.27
நல்ல நேரம்- 9.27-10.57

**மேடம்**

காரிய சித்தி, அபூர்வ சந்திப்பு, கௌரவமான நிலை, பொருள் சேரல்.

**இடபம்**

ஆரோக்கியம், செய்தொழில் விருத்தி, சந்தோஷமான சம்பவம், முயற்சி பலிதம்.

**மிதுனம்**

காரிய தாமதம், குடும்பக் கவலை, திடீர் நன்மை, தாழ்ந்த சுபாவம்.

**கடகம்**

தந்தை மனஸ்தாபம், ரோக பயம், காரிய தாமதம், அபகீர்த்தி.

**சிங்கம்**

இனிய சம்பவம், காரிய அனுகூலம், வாக்குப்பலிதம், தனவரவு.

**கன்னி**

தொழில் நன்மை, வார்த்தை செல்லாமை, முயற்சி தாமதம், மாதர் நட்பு.

**துலாம்**

மதிக்கப்படுதல், காரிய ஜெயம், தெய்வ சிந்தை, சயன சுகம்.

**விருச்சிகம்**

வீண் அலைச்சல், கோபப்படுதல், நித்திரைக் குறைவு, ரோகம்.

**தனுசு**

குதூகலம், தெய்வ தரிசனம், தனலாபம், தொழில் நன்மை.

**மகரம்**

தொழில் அபிவிருத்தி, முயற்சி கைகூடும், இனிய சம்பவம், மேன்மை.

**கும்பம்**

பிரயாணம், கட்டுப்பாடு, காரிய தாமதம், தொழில் திருப்பம்.

**மீனம்**

காரிய தடங்கல், உஷ்ண வியாதி, பிரயாண பயம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

**அரசு- புலிகள் சமாதானப் பேச்சு**

# இந்தியாவில் இடம்பெற கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்

### ரெலோ முதல்வர் கரிகாலனிடம் உறுதி

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறவிருக்கும் சமாதானப்பேச்சுக்கள் இந்தியாவில் இடம் பெற, இந்திய அரசிற்கு தமிழ்த் தேசியகூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மட்டுஅம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன்தன்னிடம் வேண்டுகோள் விடுத்ததாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரமுகரும் ரெலோ முதல்வருமான என். ஸ்ரீகாந்தா லண்டன்பி. பி.சி வானொலிக்கு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அண்மையில் கொக்கட்டிச்சோலைக்கு சென்று திரும்பிய ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா கரிகாலனுடன் பேச்சு வார்த்தை நடத்தியிருத்தார்.

இதன்போதே கரிகாலன் இந்த வேண்டுகோளைவிடுத்ததாகவும் அதற்குதாம்ஆவன செய்வதாக உறுதியளித்ததாகவும் ஸ்ரீகாந்தாமேலும்தெரிவித்தார். (உ-5-4)

# யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுவின் தலைவர் கொழும்பு வருகை

### வந்த கையுடன் பிரதமருடன் ஆராய்வு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் உருவாகியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான நிரந்தர யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கான குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் றோன்ட்பியூறு நேற்று கொழும்பு வந்துள்ளார்.

நோர்வே நாட்டின் முன்னாள் உயர் இராணுவ அதிகாரியான இவர் கொழும்பு வந்து சேர்ந்த கையுடன் பிரதமர் ரணிலைச் சந்தித்து புரிந்துணர்வு உடன்படிக்கை, யுத்த நிறுத்தம், அதனைக் பண்காணிக்கும் விதம் என்பன தொடர்பாக ஆராய்ந்தார்.

எதிர்வரும் புதன்கிழமை இவர் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பியூறு முன்னதாக மேற்படி விடயங்கள் தொடர்பாக லண்டனிலுள்ள புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தமிழ்த் தினப் போட்டி சுற்றுநிருபம் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

முதலாம் தவணை தொடங்கி சில வாரங்களில் வழக்கமாக கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வந்த தமிழ்த்தினப் போட்டிகள் பற்றிய சுற்றுநிருபம் இது வரை யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும், மாணவர்களின் மொழி அடைவுகள் சம்பந்தமான திறன்களைப் பேணும் பொருட்டுஇப் போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்துவதற்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறியப்படுகிறது.

(எ-19)

# திருமலை மாவட்டத்தில் பொங்குதமிழ் எழுச்சிவிழா

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாசைகளையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்க வேண்டும் எனக்கோரி, இம் மாதம் 9,10 ஆம் திகதிகளில் திருமலை மாவட்டத்தில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு கொண்டாடப் படவுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு வவுனியா மாவட்டங்களில் மிகவும் எழுச்சியுடன் நடந்து முடிந்துள்ள இப் பொங்கு தமிழ் நிகழ்வைப் போன்று கொழும்பிலும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

### இலவச திருமண பதிவு

(நவக்கிரி)

வளலாய் பகுதியில் அண்மையில் இலவச திருமணப் பதிவு இடம்பெற்றது.

திருமணமாகி நீண்டகாலமாகியும், திருமணப்பதிவு மேற்கொள்ளத் தவறிய 25 தம்பதிகள் இதனால் பயனடைந்தனர்.

யாழ்.மாவட்ட காணிமேலதிகப் பதிவாளர் ந. சதாசிவ ஐயரின் பணிப்பின் பேரில் அச்சுவேலிப் பகுதி இறப்புப் பிறப்பு பதிவாளர் திருமதி கௌரி இப்பதிவுகளை மேற்கொண்டார். (உ-233)

## இன்று ஒரு தகவல்

# வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார். அவர் கையில் ஒரு பை. அதற்குள் நிறையப் பணம் இருக்கிறது. அந்தப் பெரியவர் களைப்பினால் கண்ணை லேசாக மூடுகிறார். அந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆசாமி ஒருவன் மெதுவாகக் கிட்ட வருகிறான். நைசாக அந்தக் கைப்பையைக் கிளப்பிக் கொண்டு போய்விடுகிறான். அவன் முழுதாக நழுவுவதற்குள் பக்கத்தில் இருந்தவர்கள் அதைப்பார்த்து விடுகின்றார்கள். உடனே சத்தம் போடுகிறார்கள். பெரியவர் விழித்துக்கொள்கிறார்.

உடனே எழுந்து ஓடிப்போய் அந்த ஆசாமிமேல் பாய்ந்து பையை மீட்டுக் கொண்டு வந்ததன் பின்புதான் அவருக்குநிம்மதி! அந்த ஆளுக்கும் என்னென்ன மரியாதை கொடுக்கவேண்டுமோ அவற்றை மற்றவர்கள் பார்த்துக் கொள்வார்கள். இதுதான் இயல்பு. இதை விட்டுவிட்டு அந்தப் பெரியவர் 'பணப் பையைத்தானே எடுத்துக் கொண்டு போகிறார். போனால் போகட்டும், அவனும் மனிதன், நானும் மனிதன் தானே!' என்று வேதாந்தம் பேசமாட்டார். அப்படிப் பேசினால் அவர் வேதாந்தத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று அர்த்தம். இதை விளங்க வைப்பதற்காக ஸ்ரீ ராம கிருஷ்ணரே ஒரு கதை சொல்லியிருக்கின்றார்.

ஒரு காட்டில் ஒரு சாது இருந்தாராம். அவருக்குப் பல சீடர்கள். ஒருநாள் அவர்களையெல்லாம் கூப்பிட்டு உட்காரவைத்து உபதேசம் பண்ணினார். இந்த உலகத்தில் உள்ளவை எல்லாம் கடவுளின் வடிவங்கள். அதை நீங்கள் எல்லோரும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு எல்லோரையும் வணங்க வேண்டும் என்றார். எல்லாச் சீடர்களும் மிகவும் அக்கறையாக அதனை மனதில் வாங்கிக் கொண்டார்கள்.

ஒரு நாள் ஒரு சீடன் விறகு பொறுக்குவதற்காக காட்டுக்குப் போனான். அவனுக்கு எதற்கு விறகு ஹோமம் வளர்ப்பதற்கு. நடுக்காட்டில் போய்க் கொண்டிருக்கிறான். அந்தச் சமயத்தில் திடீரென்று ஒரு சத்தம் கேட்கிறது. யாரோ ஒரு ஆள் பலமாகச் சத்தம் போட்டுச் சொல்கிறார். 'யார் எங்கேயிருந்தாலும் ஓடிப்போய் விடுங்கள். மதம் பிடித்த யானை ஒன்று வந்து கொண்டிருக்கிறது.'' என்று யாரோ கத்துகிறார் அவ்வளவு தான். இதைக் கேட்டதும் அங்கேயிருந்தவர்கள் ஆளுக்கு ஒருபக்கமாக ஓடிப்போய் ஒளித்துக்கொண்டார்கள். சிலர் கிடுகிடென்று மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். ஆனால் இந்தச் சீடன் மட்டும் நகரவேயில்லை.

நான் எதற்காக ஓடவேண்டும்? நானும் கடவுள்! இந்த யானையும் கடவுள்! என்று நினைத்துக் கொண்டு அந்த இடத்தில் அசையாமல் நின்றுகொண்டான். யானை கிட்ட வந்துவிட்டது. இவன் அசையவே இல்லை. நின்ற இடத்திலேயே நின்று கொண்டு கைகள் இரண்டையும் மேலே தூக்கினான். துதிப்பாடல் ஒன்றைப் பாட ஆரம்பித்து விட்டான். யானைக்கு மேலே குந்தியிருந்த மாவுத்தன் சத்தம் போட்டான். 'ஓடிப் போய்விடு! ஓடிப்போய்விடு' என்று கத்தினான். அந்தச் சீடனுக்கு அது பெரிதாகப்படவில்லை. தன்பாட்டில் எதையெதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

இவன் வேண்டுமென்றால் அந்த யானையைக் கடவுளாக நினைக்கலாம். ஆனால் அந்த யானை இவனைக் கடவுளாக நினைக்கவேண்டுமே! அப்படி அதற்கு ஒன்றும் தோன்றவில்லை. இவன் கைகளிரண்டையும் மேலே தூக்கிக் கொண்டு நின்றது அதற்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. அப்படியே துதிக்கையால் சுருட்டி வளைத்து அவனை மேலே தூக்கியது, தூக்கி வேகமாக ஒரு பக்கமாக தூக்கியெறிந்து விட்டுப் போய்விட்டது. 'அம்மாடி' என்று கத்திக்கொண்டே போய் விழுந்தான். பலமான காயம் ஆசிரமத்தில் இருந்தவர்கள் இதனைக் கேள்விப்பட்டு ஓடிவந்தார்கள். தூக்கிக் கொண்டுபோய் ஆச்சிரமத்தில் போட்டார்கள். இவன் மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான், அப்போது அங்கு இருந்த சீடன் ஒருவன் கேட்டான், 'யானை வந்ததுதான் உனக்குத் தெரியுமே! நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை' என்றான். உலகத்தில் இருப்பவை எல்லாமேகடவுளுடைய வடிவங்கள். நமது குருதேவர் அப்படித்தானே சொன்னார். அதனால் யானையைப்பார்த்ததும் கடவுள் தான் வருகிறார் என்று நினைத்து விட்டேன் என்றான் இவன். இதைக்கேட்டுக்கொண்டு குருநாதர் அங்கே வந்தார்.

அவர், 'அது சரியப்பா! நீயும் கடவுள்தான். யானையும் கடவுள்தான். ஆனால் அந்த யானை மேல் உட்கார்ந்திருந்த மாவுத்தனும் கடவுள் தானே! அந்தக் கடவுள் ஓடிப்போ என்று எச்சரிக்கை கொடுத்ததே! அந்தவார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை?' என்று கேட்டார். சீடன் திருதிரு என்று விழிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அவன் செய்த தப்பு அவனுக்குப் புரிந்தது. வேதாந்தத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததினால் வந்த விளைவு இது. வேதாந்திகள் மாதிரி இருக்கிற சிலரையும் இந்தக் காலத்தில் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

நான் ஆரம்பத்தில் சொன்னேனே ரயிலில் பிரயாணம் செய்த பெரியவர் ஒருவரைப் பற்றி அதே மாதிரி வேதாந்தி ஒருவரும் பிரயாணம் செய்தார். இவர் கையிலும் ஒரு சூட்கேஸ் இருந்தது. அதே சமயம் பார்த்து ஒரு திருடன் அடித்துக் கொண்டுஓடினான். எல்லோரும் சத்தம் போட்டார்கள். இவர் கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளவில்லை. போனால் போகட்டும். கவலையில்லை அந்தத் திருடனை ஒன்றும செய்யாதீர்கள். பாவம் பிழைத்து போகட்டும் என்றார். இவர்தான் உண்மையான வேதாந்தி என்று எல்லோரும் நினைத்துக் காலில் விழுந்து கும்பிட ஆரம்பித்து விட்டார்கள் ஆனால், அவர்கள் அத்தனை பேருக்கும் ஒருஉண்மை தெரியாது. அதாவது அந்த சூட்கேஸில் இருந்தது முழுவதும் கள்ளநோட்டு என்பது. □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் நல்லூர் காமாட்சியம்பாள் மடாலயம், சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயம், வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயம் ஆகியவற்றில் பண்ணிசை வகுப்புக்களை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. (எ)

# நீதி நியாயமான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

இம்மாதம்நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒழுங்காகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தேர்தல்ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இம்மாதம்நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக சகல அரசியல் கட்சித் தலைவர்களையும், தேர்தல் ஆணையாளர்நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றைநடத்தியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜயரத்தினா, அரச கட்சி ஆதரவாளர்கள் அரச உடமைகளை தேர்தலுக்கு முன்பாக விற்கிறார்கள்என்று குற்றம் சாட்டியபோது, தேர்தல் ஆணையாளர், ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதை விடுத்து நியாயமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, வடக்கு கிழக்கில் தேர்தல் நடைபெறுமா? என் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டபோது, வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான எந்தவிதமான அறிவித்தலும் இதுவரை தேர்தல் ஆணையகத்திற்கு கிடைக்கவில்லை என்றும், அதுவரை அங்கு தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ)

## சிரமதானம்

(நவக்கிரி)

வலிகிழக்கு பிரதேச செயலகப் பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (உ-233)

## வீதியால் செல்வோர் சிரமம்

(காரைநகர்)

காரைநகர் வேம்படி பிரதான வீதிக்கருகில் மீன் விற்பனைசெய்யப்படுவதால், வீதியில் மக்கள் கூடுவதையடுத்து போக்குவரத்துச் செய்வோர் பெரும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

இப்பகுதியில் சந்தையமைப்பதற்கென ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-246)

● ● ●

(கோப்பாய்)

கோப்பாய் மானிப்பாய் வீதியில் இரவு நேரங்களில் வெளிச்சமின்றி இருள் சூழ்ந்திருப்பதால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை, சுகாதார மத்திய நிலையம் மற்றும் கிராமிய வங்கி ஆகியன இவ் வீதியில் அமைந்திருக்கின்ற போதும் வீதி வெளிச்ச மின்றி இருள் சூழ்ந்திருப்பதாகவும் இதனை நீக்கும் வகையில் வீதிக்கு மின்குமிழ் பொருத்துமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், செட்டித்தெரு நல்லூரில் அமைந்துள்ள நிலைய மண்டபத்தில் தலைவர் க.குமாரசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது,

நடப்பாண்டிற்கான காப்பாளர்களாக; ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், வி.இராசேந்திரா, தலைவராக க. குமாரசாமி, உப தலைவர்களாக அ. கோபால கிருஷ்ணன், வி. சோமசுந்தரம், செயலாளராக; என். நிரோஷானந்தன், உப செயலாளராக பா. பாலசுப்பிரமணியம், தனாதிகாரியாக க. லோகானந்தன் ஆகியோரும் 20 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

### கோப்பாய் பிரதேச செயலகத்தில்

## காலங் கடந்த பிறப்பு இறப்பு திருமணப் பதிவு

(யாழ்ப்பாணம்)

நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ், கோப்பாய் பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் ஒன்றாக காலங்கடந்த பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி பிரதேச செயலகத்தில் வைத்து பதிவாளர் காரியாலய உத்தியோகத்தர்களால் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிமுதல் இப்பதிவுகள் இடம்பெறவுள்ளதால்,

பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் பொதுமக்கள், தமது பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தேவையான ஆவணங்களின் விபரங்களைப் பெற்று அதற்குரிய ஒழுங்குகளுடன் குறித்த நேரத்திற்கு சம்பந்தப்பட்ட இடத்திற்கு வருமாறு கோப்பாய் பிரதேச செயலர் /கே. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (உ)

### கவிமணி

## அடைக்கலமுத்துக்கு "மதுரகவி" பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கவிமணி அடைக்கலமுத்து (அமுது) அவர்களுக்கு மதுரகவி பட்டம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாலை4.30 மணிக்கு இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலய திறந்தவெளியரங்கில் நடைபெற்றது.

அ. யோ. சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மதுரகவிப் பட்டத்தை பேராசிரியர் பொ·பாலசுந்தரம்பிள்ளை வழங்கிக் கௌரவித்தார்.

வாழ்த்துரைகளை பேரறிஞர் எஸ். ஜெபநேசன் அடிகளார், பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் உட்படப்பலரும் வழங்கினர்.

கவிப்புலத்தில் தனக்கென தனியான இடத்தை வகிக்கும் அடைக்கல முத்து அவர்கள் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதும் தற்போது லண்டனில் வசித்துவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பட்டமளிப்பு நிகழ்வை இளவாலை பொருளாதார கலாசாரவளர்ச்சிச் சங்கம் ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## பிறப்பைப் பதிவு செய்க

(உரும்பிராய்)

உரும்பிராய் வடக்குப் பகுதியில், 3மாதங்களிற்கு மேலான குழந்தைகளின் பிறப்பைப் பதிவு செய்யாதவர்கள், கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் அதற்குரிய படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்தி எதிர் வரும் 8 ஆம் திகதிக்கிடையில் படிவத்துடன் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5,215)

## சிந்தனைக்கு விருந்து

### ஏற்று நடக்கார்,

அலைகள் கடலில் ஓய்ந்தாலும்
அகதிகள் துன்பம் ஓயாது
மலைகள் பிளந்து வீழ்ந்தாலும்
மா,பா ணின்விலை வீழாது
தலைவர்கள் இணக்கம் கண்டாலும்
தடுப்பவர் முயற்சி தளராது
பலமிகு சட்டம் விதித்தாலும்
பலரவை ஏற்று நடக்காரே.

'பழையவன்'

## ஜோர்ஜியாவுக்கு படைகளை அனுப்புவதற்கு அமெரிக்கா முடிவு

(வாஷிங்டன்)

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் ஒன்றான ஜோர்ஜியாவுக்கு தனது படைகளை அனுப்புவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா உறுப்பினர்கள் செச்சினிய தீவிரவாதிகளுடன் இணைந்து தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக கிடைத்த உளவுத் தகவலை அடுத்து, செச்சினியாவின் எல்லைப்பகுதியான ஜோர்ஜியாவிற்குள் தீவிரவாதிகளின் ஊடுருவும் முயற்சியைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் ஜோர்ஜிய படைகளுடன் இணைந்து எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு 200 அமெரிக்கப் படையினர் முதற் கட்டமாக அனுப்பப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஜோர்ஜியாவுக்கு அமெரிக்கப் படைகள் அனுப்பப்படுவது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின்,

மத்திய ஆசியாவில் அமெரிக்கப் படைகள் பணியாற்ற விருப்பது சாத்தியமென்றால் ஜோர்ஜியாவிலும் அமெரிக்க படைகள் அனுமதிக்கப்படலாமென்றும்,

ஜோர்ஜியாவில் அமெரிக்க படைகள் நிலை கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படுவது அவ்வளவு மோசமான விடயம் அல்ல என்றும் கூறியுள்ளார். (உ-5)

## அமெரிக்காவுக்கு அனுசரணை வழங்க பிரிட்டன் தயார்

(லண்டன்)

நியாயமான முறையில் அமெரிக்காசெயற்படுமானால் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைகளுக்குசகலவிதத்திலும் பிரிட்டன் ஆதரவு வழங்குமென பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்குஎதிரான யுத்தத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பாக அமெரிக்காவோ அல்லது பிரிட்டனோ எந்த வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை, எனினும் சரியானமுறையில்அமெரிக்கா நடக்குமாயின் அதற்கு உதவ பிரிட்டன்எப்பொழுதும் ஆயத்தமாகவுள்ளதுஎன்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)

## இராம பக்தர்களை முஸ்லிம்கள் தாக்கினரா? மறுக்கிறார் முஷாரப்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவில் இராமபக்தர்கள தாக்கப்பட்டதற்கும் முஸ்லிம்களுக்கும் எந்த் வித தொடர்பும் இல்லை என பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளதாக பாகிஸ்தானில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்கு சென்ற இந்துக்களை ஒரு குழு கொளுத்தியிருக்கலாம், ஆனால் அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தொடர்பு இல்லை.

இராமர் கோயில் விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு பங்குண்டாயினும், கொடூரமாக எரித்து படு கொலை செய்யுமளவிற்கு முஸ்லிம்கள் துணிய மாட்டார்கள் என்று முஷாரப் தெரிவித்ததாக அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

# உலக தரிசனம்

## ஈராக்கிற்கு ஆயுதம் விநியோகித்த 6 நிறுவனங்கள் மீது விசாரணை

(சூரிச்)

சர்வதேச தடைகளை மீறி ஈராக்கிற்கு இராணுவ உபகரணங்களை வழங்கின என்ற சந்தேகத்தின் பேரில், 6 நிறுவனங்களின் மீது ஜேர்மன் அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சட்ட விரோத ஆயுதங்களையும்இராணுவ தளபாடங்களையும் மற்றும் உயிரியல் ஆயுதங்களையும் சட்டவிரோதமாக இலவசமாகவும் குறைந்த விலையிலும்வழங்கி வந்ததாக மேற்படி பிரபல நிறுவனங்கள் ஆறும் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளன.

விசாரணையில் உண்மை நிரூபிக்கப்பட்டால் சர்வதேச அழுத்தத்தின் பேரில் எந்தத் தண்டனையும்வழங்க சட்டத்தில் இடமுண்டு என ஜேர்மன் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (உ-7)

## பாகிஸ்தானில் இந்துக்களுக்கு என்றுமில்லாத பாதுகாப்பு

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதை அடுத்து பாகிஸ்தானின் அங்குள்ள சிறுபான்மை இனமாகிய இந்துக்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முக்கிய நகரமும் இந்துக்களின் நகருமாகிய கராச்சி இந்துக் கோயில்கள் மற்றும், இந்துக் குடியிருப்புக்களைச் சூழ பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்து கிராமங்களுக்குள் அனுமதி இன்றி முஸ்லிம்கள் செல்வதற்கும் கராச்சியை விட்டு இந்துக்கள் வெளியேறுவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதுடன்இரவு நேர ஊரடங்கும்விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இராமபக்தர்கள் ரயிலில் வைத்து எரிக்கப்பட்டதற்கும், தொடர்ந்து இந்தியாவில் வன்முறை நிகழ்வதையுமிட்டு கவலை தெரிவித்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப், வன்முறைகளை முற்றாக ஒழிக்க இந்தியா எடுத்த கடும் முயற்சியை தான் வரவேற்பதாக கூறியுள்ளார். (உ-7)

## உயிரைக் கொடுத்தும் அயோத்தியில் இராமர் ஆலயம் அமைப்போம், விஸ்வஹிந்த்ர சூளுரை

(புதுடில்லி)

அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பணி விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் இதற்காக எத்தனை உயிரைக் கூட கொடுக்கத்தயாராக உள்ளதுடன்எந்தச் சக்தி வந்தாலும் அதைஎதிர்த்து கோயில் கட்டியே தீருவோம் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் சூளுரைத்துள்ளது.

இதனை அடுத்து, அடுத்த 15 நாட்களுக்கு உத்திரப்பிரதேசம் முழுவதும் கடும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சகல மாவட்டங்களிலும் உள்ள பொலிஸாரை உசார் நிலையில் நிற்குமாறு இந்திய அரசு அறிவித்துள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளைக் கையாளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மாநில அதிகாரிகளுக்கும், மாவட்ட அதிகாரிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது, (உ-7)

## இராணுவ ஆட்சியாளரால் மியன்மார் தேசிய லீக் உறுப்பினர் ஐவர் விடுதலை

(ரங்கூன்)

மியான் மாரின் இராணுவ ஆட்சியாளர்கள் அங்கு ஜனநாயகம் வேண்டிப் போராடி வரும் ஆங் சாங் சூகியின் தேசிய லீக் கட்சியின் உறுப்பினர்கள் ஐவரை விடுதலை செய்துள்ளனர்.

இச்செய்தியானது மியான்மாரில் ஜனநாயகம் மலர வேண்டிப் போராடும் ஆங் சாங் சூகிக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

தற்பொழுது விடுவிக்கப்பட்ட ஐவரையும் சேர்த்து தேசிய லீக்கட்சியைச் சேர்ந்த 73பேர் இதுவரை காலமும் இராணுவ ஆட்சியாளர்களால் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவரும் இராணுவ ஆட்சியாளருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது கைதுசெய்யப்பட்டவர்கள்.

இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் ஜனநாயக லீக் கட்சியைச் சேர்ந்த 200 ற்கு மேற்பட்ட பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-7)

## மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பகுதியில் மாடுகளுக்கு ஏற்படும் கருங்கால் நோய்க்குதடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

வேலணை கால்நடை வைத்திய நிலையத்தினாலேயே இத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தீவகத்தின்ஏனைய பகுதிகளிலுள்ள மாடுகளுக்கும் இத் தடுப்பூசி ஏற்றப்பட விருப்பதாக, வேலணை அரச கால்நடை வைத்திய நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-75)

## நேட்டோ படைகளுக்கு 'டிமிக்கி' விடும் ஹரடிக்ஷ்

(குறேர்ஷினி)

பொஸ்னியாவில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக தேடப்பட்டுவருபவரான முன்னாள் அதிபர் ரடோவான்ஹரடிக்ஷை கைது செய்யும் முயற்சியில் இரண்டாவது தடவையாகவும் நேட்டோபடைகள் தோல்வி கண்டுள்ளனர்.

பொஸ்னியாவின் தென் கிழக்குப்பகுதியில் உள்ள கிராமமொன்றில் ஹரடிக்ஷ் இருப்பதாக கிடைத்தஉளவுத் தகவலை அடுத்து நேட்டோ படைகள் நேற்று முன்தினம் காலை அந்த கிராமத்தை சுற்றி வளைத்தனர்.

எனினும்,இந்த முற்றுகையிலிருந்து அதிபர் ஒருவாறு தப்பியுள்ளதுடன் இதற்கு முதல் நாள் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போதும் அதிபர் அகப்படவில்லையென நேட்டோ படைகளின் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஹரடிக்ஷை கைது செய்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் ஆஜர் செய்யும் பொருட்டே தரைப்படையினர் விமானப்படையினர் ஆகியோர், கூட்டாக தேடுதல் நடத்தி வருவதாகஅவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இராணுவம் - புளொட் இணைந்த இரவு நேர ரோந்துப்பணி இனிமேல் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் இராணுவத்தினருடன் இணைந்து புளொட் அமைப்பினர் மேற்கொண்டுவந்த இரவு நேர ரோந்துப்பணியை இன்னும் ஓரிரு நாட்களில் நிறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசு விடுதலைப் புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த மகைச்சாத்தானதை அடுத்து புளொட் அமைப்பினர் தம் பாவனையிலுள்ள ஆயுதங்களை அரசாங்கத்திடம் மீள ஒப்படைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்;

இதேவேளை, வவுணதீவு, செங்கலடி, கறுத்தப்பாலம் ஆகிய சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினருடன் இணைந்து மேற்கொண்டு வந்த சோதனை நடவடிக்கைகளையும் நிறுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து சிஹல உறுமயவும் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஐ.தே.மு அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளின் ஓரங்கமான அரசு-புலிகள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கோரி சிஹல உறுமயவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம்மேன்முறையீட்டு நீதிமன்றில்வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறானஉடன்படிக்கை எதனையும் இனிமேல் பிரதமர் ரணில்செய்துகொள்ளாதவாறு தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும், கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் உலக அரங்கில்தடைசெய்யப்பட்ட இயக்கமாகையால், பிரதமர் ரணில் அரசாங்கத்தின் பிரதி நிதி என்ற வகையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான சட்டபூர்வமான அதிகாரங்கள் எவற்றையும் பயன்படுத்த வில்லை எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, மேற்படி உடன்படிக்கையை ரத்துச் செய்யுமாறு கோரி, சிங்கள தேசிய ஜாதிக சங்கமய கடந்த வெள்ளியன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது
- குறள்

வலம்புரி

## புலிகளை அனுமதிக்குக

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்டுள்ளநிரந்தரயுத்தநிறுத்தம்- பாதைதிறப்பு என்பன சற்று அமைதி நிலையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். கண்டி வீதியில் கிளிநொச்சி வரையான வீதியே இதுவரை பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிவரையானபாதை திறக்கப்பட்டால்,வடக்கு -தெற்கை இணைக்கும் தரைவழிப் பாதையூடாக மக்கள் கடினமற்ற போக்குவரத்தை மேற்கொள்ள முடியும்.

இது ஒருபுறமிருக்க பாதை திறப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆயுதமின்றி யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் வர முடியும்.

அவ்வாறு விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திற்குள் வந்தும், யாழ்ப்பாண நீதிமன்றுகளில் வழக்குகள் குறைவதுடன் பொலிஸாருக்கும், கலால் திணைக்கள ஊழியர்களுக்கும் வேலைப்பளு கணிசமாகக் குறைந்து விடும்.

காரணம் விடுதலைப் புலிஉறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்குள் காலடி வைத்ததும்,களவும்-கசிப்பும் பறந்தோடும். மக்கள் நிம்மதியாக உறங்க முடியும். கசிப்பைக் குடித்து ஈரலில் ஒரு சிறு பகுதியை மட்டும் மிச்சப்படுத்தி இயமனின் வருகைக்காகக் காத்திருப்பவர்களும், சில வருடங்கள் உயிர் வாழும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

எனினும் புலி உறுப்பினர்களின் வருகை பாதை திறப்போடுதான் சாத்தியப்படுமாயின் அதில் ஏற்படுகின்ற கால தாமதத்தைத் தவிர்க்க குருநகர், பாசையூர் ஊடாக வருகின்ற புலி உறுப்பினர்களை யாழ்ப்பாணத்தில் நடமாடுவதற்கு படையினர் அனுமதிக்க வேண்டும். அதன்பின்னர் கசிப்பும் களவும்இடம்தெரியாமல் போவதைப் பொலிஸார் புரிந்து கொள்வர்.

சிறைக்குச்செல்லாமலே திருடர்கள் திருந்தி விடுவர். கசிப்புக்காய்ச்சுபவர்கள் பிற உயிர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று தன் குடும்பம் வாழ்வதற்காக மற்றவன் குடும்பத்தைக் குட்டிச் சுவராக்கும் தீய எண்ணத்தை காய்ச்சி விடுவர். தீமை எரிந்தால் அவர்களும்நல்லவர்களே.எனவே பொதுநோக்கில் புலிகளுக்கு அனுமதி வழங்குவது படையினரின்கடமையாகும்.

# தான்தோன்றித் தனமாக வாழ்கின்றவர்க்குத் தவக்காலம் பெரும் கொடையாக அமைந்தது



## பரமபிதா காட்டிய பாதை

### இ. அலெக்ஸ் அமலரட்ணம்

இறைவனால்தனது சாயல் கொண்டு படைக்கப்பட்ட மனிதன் சமூகத்திலே புனிதமாக வாழ்ந்து திருச்சபையின் அழைத்தலிலே பிரமாணிக்கமாக செயற்பட்டு ஈற்றிலே முடிவில்லாதநிலைவாழ்வைப் பெற வேண்டுமென ஆசிக்கின்றான்.

ஆனால் உலகம் சரீரம், பசாசு என்னும் காரணிகளுக்குள் அகப்பட்டு பாவத்தின் சேற்றிலே அமிழ்ந்து, இறை அருளைஇழந்து,இறைதந்தை உறவை முறித்து தான்தோன்றித் தனமாக வாழுகின்ற மனிதனுக்கு, இறைவனின் மாபெரும்கொடையாக மீண்டும் ஒரு தவக்காலம் எமக்கு தரப்பட்டுள்ளது.

தவக்காலம்

எமது கடந்த கால பாவம் நிறைந்த புனிதமற்ற வாழ்வைச் சீர் தூக்கிப் பார்க்கவும், அவற்றுக்காக உண்மையாக மனம் வருந்தி இறைவனிடமும், எம் அயலவர்களிடமும், மன்னிப்பின் ஊடாக ஒப்புரவாகி எமது வாழ்வை மாற்றி அமைத்து, இறையருளோடு புது வாழ்வைத் தொடங்கவும், கிறிஸ்துவின் சீடத்துவத்துக்கு வாழ்வின் சிலுவைகள் ஊடாக சாட்சியம் பகரவும்,இத் தவக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

எகிப்தின் அடிமைத் தனத்தில் இருந்து மோயீசன் மக்களை மீட்டுவருகின்ற போது தண்ணீர்த் தாகத்தினால் அவர்கள் தவித்த போது பாலை நிலத்திலே அவர்களுக்கு குடிப்பதற்கு நீரைக் கொடுத்து பாவிகளாகிய எமக்கு என்றும் இறை பராமரிப்பு உண்டு என்பதை முதல் வாசகம் (விடு.பய.: 17:3-7) ஊடாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

பரிசுத்த ஆவி

திருமுழுக்கின் ஊடாக பரிசுத்த ஆவியின் ஆலயமாக வாழுகின்ற எமக்கு அதே ஆவியின் வழியாக இறைவன் எம் ஒவ்வொருவர் மீதும் தமது நிறை அருளைப்பொழிகின்றார் என்றும், எமது பாவங்களுக்காக சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்ட இறைமகன் கிறிஸ்துவின் ஊடாகநாம் கடவுளின் மாட்சியைப் பெறுவோம் என்றும் இரண்டாம் வாசகம் (உரோ 5:1-3,5-8) ஆணித்தரமாக எடுத்துக் கூறுகின்றது.

இறைமகன் கிறிஸ்து தன்னுடைய பணி வாழ்விலே சமாரியப் பெண்ணோடு நடத்திய உரையாடல் மூலம்அவளுடைய கடந்தகால பாவவாழ்வின் உண்மைகளை எடுத்துக் கூறி நிலை வாழ்வை எமக்குப் பெற்றுத் தருகின்றார். எமது ஆன்மீக தாகத்தை தணிக்க வல்ல உயிருள்ள ஊற்று தானே என்பதையும், தானே உண்மையான மெசியா என்பதையும் தெளிவுபடுத்தி எமது வாழ்வை மாற்றி அமைக்க அழைப்பு விடுக்கின்றார். (யோவான்4:5-42)

அர்த்தமுள்ள வாழ்வு

எனவே இத் தவக்காலத்தில் பாவ வாழ்வில் இருந்து விடுபட்டு புனிதமாக வாழவும் இறைபராமரிப்பு எமக்கு என்றும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுவோம். இறை மகன் கிறிஸ்துவேஎமது நிலை வாழ்வின் வழி என்பதை ஏற்றுக்கொண்டு அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றை விசுவாசத்தோடு பங்கெடுப்போம். இறைவாக்கினராக, மெசியாவாக, தன்னுடைய வாழ்வாக, வழியாக சமாரியப் பெண் ஏற்றுக்கொண்டது போல, தன்னை அர்ப்பணித்து இறைவனுக்குள் வாழ்ந்தது போல, தான் ஏற்றுக் கொண்டவாழ்வின் நீருற்றாகிய யேசுவை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொன்னது போல நாமும் எமது அன்றாடவாழ்வில் இயேசுவை சிந்திக்கவும் நம் விசுவாச அர்ப்பணத்தில் முதிர்ச்சியடைந்து இத் தவக்கால வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம்.

## பெப்ரவரி மாதத்துக்கான நிவாரணம் தாமதம் எம்.பிக்களிடம் முறையீடு

(தென்மராட்சி)

குடாநாட்டில் பெப்ரவரி மாதத்துக்கான நிவாரணம் இன்று வரை வழங்கப்படவில்லை என கிராமசேவையாளர்கள் சிலர் தமிழ்க்கூட்டமைப்பின் பாராளுமன்றஉறுப்பினர்களிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும்,

இது விடயம் தொடர்பாக தாம்யாழ்.மாவட்டஅரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்வதாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, கொழும்பில் இருந்து கப்பலில் நிவாரண அரிசி எடுத்து வருவதில் ஏற்பட்டதாமதமே, குறித்தநிவாரணத்தைஇது வரை வழங்காமைக்கானகாரணம்என அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-77)

## க. பொ. த. உயர்தர பாடசாலை விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் க. பொ. த. உயர்தரம் வரை கல்வி கற்பிக்கப்படும் பாடசாலைகளின் விபரங்களை யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கோரியுள்ளார்.

இவ் விபரங்களை நாளை மறுதினத்திற்கு முன்புதனக்கு அனுப்பி வைக்குமாறு அவர் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். (எ-19)

## அச்சுவேலிப் பகுதியில் நடமாடும் செயலக சேவை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் நூறு நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு அம்சமாக கோப்பாய்ப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அச்சுவேலிப்பகுதியில் நடமாடும் செயலக சேவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை9.00 மணிக்கு அச்சுவேலி பிரதேச சபை உபஅலுவலகத்தில் இச் சேவை இடம் பெறவுள்ளது. (உ)

## கருத்தரங்கு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்திலுள்ள உயர்தர பாடசாலை மாணவர்களுக்கு சமாதான விழிப்புணர்வு, ஆளுமை தொடர்பான கருத்துக்களை முன்வைத்து அருட்திரு சாலஸ் கொலின்ஸ் தலைமையில் புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த புதன்கிழமை கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. (உ-232)

## தினசரி தியானம்

### விலை

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா! ஆர் கொலோ சதுரர்?
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்று என்பால்!

-மாணிக்கவாசகர்

பொருளுக்கேற்ற விலை கொடுத்தாக வேண்டும். இறைவா, உன்னை நான் அடைதற்கு என்னை நான் என்று ஈடு கொடுக்க இசைவேனோ?

ஒரு படிமேலேறக் கீழே இருப்பதை விட்டாக வேண்டும். மேலானதைப் பெறக் கீழானதைத் தள்ள வேண்டும். சிறுமையை அகற்றியவர்க்குப் பெருமை கிட்டுகிறது. அஞ்ஞானத்தை விட்டவர்க்கு ஞானம் உதயமாகிறது. சுயநலத்தைப் போக்கினவனுக்கு எல்லாம் சொந்தம். தான், தனது என்பதை விலையாகச் செலுத்தினால் தெய்வீகம் என்னும் ஒப்பற்றதைப் பெறலாம்.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (19)

தவக்காலம் இரண்டாம் வாரம் (ஊதா)

**திபா 95: 1 - 2, 6 - 9 'உங்கள் இதயத்தை கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.'**

உடலும் உள்ளமும் வளர்வதை முதிர்ச்சியடைதல் என்கிறோம். இதே போல் ஆன்ம வளர்ச்சிக்கு விசுவாச அர்ப்பணத்தில் வளர்தல் அவசியம். இயேசுவைச் சந்தித்த சமாரியப்பெண், இயேசுவை அந்நிய யூதனாக (4:9), மரியாதைக் குரியவராக (4:11) இறைவாக்கினராக (4:19) மெசியாவாக (4:29) எனப் படிப்படியாக அறிந்து உணர்ந்து, ஏற்றுத் தன்னை அர்ப்பணிப்பதில் வளர்வதை இன்றைய நற்செய்தியில் காண்கிறோம். தான் ஏற்றுக் கொண்ட வாழ்வின் நீரூற்றாகிய இயேசுவைத் தம் ஊராருக்கும் அறிமுகப் படுத்துகிறார். நாமும் இயேசுவைச் சந்தித்து நம் விசுவாச அர்ப்பணத்தில் வளர்ச்சியடைவது கிறிஸ்தவ வாழ்வில் இன்றியமையாததாகும்.

- காவலன்




### பங்களாதேஷில் படைகள் உஷார்

இந்தியாவில் தொடரும் இந்து முஸ்லிம் மதக்கலவரத்தை அடுத்து பங்காளதேஸில் வாழும் இந்து மக்களுக்கான பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து அங்கு இந்துக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் பாதுகாப்புக் கருதி அந்நாட்டுப்படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்து ஆலயங்களுக்கான பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

### ஊழல்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசில் சமுர்த்தி அமைச்சுப் பொறுப்பை ஏற்றபின் அமைச்சுக் காரியாலயத்திற்குச் சென்ற எஸ்.பி. திஸநாயக்க அங்கு உத்தியோகத்தர்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் சமுர்த்தி அமைச்சராக இருந்த போது ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஜனாதிபதி சந்திரிகா இன்னமும் குற்றம் சாட்டி வருகிறார். ஜனாதிபதி கூறிவருவது போல் உண்மையில் ஊழல் நடவடிக்கையில் நான் ஈடுபட்டு அது நிரூபிக்கப்படுமானால் அதற்குரிய தண்டனையாக என்னை நானே சுட்டுத் தற்கொலை செய்துகொள்வேன் என்று அவர் உறுதிபடத்தெரிவித்துள்ளார். (வ)

### புரிந்துணர்வு...

அதனைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனை அடுத்து கட்சியின் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் நேரில் சென்று கையளித்துள்ளனர். (வ)

## கண்ணீர் அஞ்சலி

வலம்புரி அலுவலகத்தில் கடமையாற்றிய
செல்வி சி. லீலாவதி (நந்தா)
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**உமையம்மா சின்னத்தம்பி**
அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை
அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு தெரிவித்து,
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
- வலம்புரிக் குடும்பம்

பிரகாசமான சலவைக்கு
**மில்க்வைற் பிளஸ்**
பாவியுங்கள்
மில்க்வைற் சோப் இன்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

நாளை மறு தினம் ஆரம்பமாகின்றது

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

## நாடக அரங்கியற் கண்காட்சி - 2002
## DRAMA AND THEATRE EXHIBITION - 2002

(எலிசபேத் கால அரங்கு)

பிரவேசம் இலவசம்

★ நாடக அரங்கியல் சார்ந்த காட்சி விளக்கங்கள்
★ ஷேக்ஸ்பியரின் 'மக்பெத்' ஆற்றுகை
★ ஒளிநாடா விளக்கங்கள்

காலம்: 5, 6, 7, மார்ச் 2002 (செவ்வாய், புதன், வியாழன் - 3 நாட்களுக்கு)
நேரம்: தினமும் காலை 9.00 மணி - 5.00 மணி வரை
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 021-2393, இணையம்: www.cpateam.org
– திருமறைக் கலாமன்றம் –

## தென்மராட்சி மோட்டரோலா உரிமையாளர் கலந்துரையாடல்

மேற்படி கலந்துரையாடல் நாளை (04.03.2002) திங்கள் காலை 11.00 மணியளவில் (புதிய நேரம்) மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலத்திற்கு அருகாமையில் நடைபெறும். தயவு செய்து அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

– ச. யோகராசா –

[C/3619]

## Sri Lanka Computer Driving Licence (SLCDL) Examination

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும், மேற்படி பரீட்சை எமது தலைமை அலுவலகத்தில் இம்மாத இறுதி வாரத்தில் நடைபெறவுள்ளது. MS Office கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்கள் (எந்த நிறுவனத்திலேனும்) மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள். மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குனர்,
IIS, யாழ்ப்பாணம்.

[C/3621]

## YOGI HOME SCIENCE ACADEMY

வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் குறுகிய கால புதிய வகுப்புக்கள்
மார்ச் 9 ஆம், 11 ஆம் திகதிகளில் ஆரம்பமாக உள்ளன.

1. இலகுவழித் தையல் முறைகள் 2. கேக் ஐசிங் 3. சமயற்கலை
4. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்களும், மாச்சீனி மலர் அலங்காரங்களும் (Fondant Icing Structures & Sugar Flowers)
5. முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (15 வகுப்புக்கள் மட்டும்)
6. பூக்கள் தயாரித்தலும், அலங்கரித்தலும்
7. துணியில் வர்ண அலங்கரிப்பு (Fabric Paintings) (10 வகுப்புக்கள் மட்டும்)

யாழ்ப்பாணத்தில் 09.03.2002 அன்று. வட்டுக்கோட்டையில் 16.03.2002 அன்று.

லீலா இரட்ணசபாபதி,
"திருமகள் வாசம்",
பிரதான வீதி
(வட்டு தபாலகத்திற்கு அருகில்),
வட்டுக்கோட்டை.

இரண்டு இடங்களிலும் சேரவிரும்பும் மாணவிகள் யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்னபாக)

(4765)

## இதய அஞ்சலி

### செல்லையா வல்லிபுரம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பணியாற்றி வந்தவருமான

*திரு. செல்லையா வல்லிபுரம் அவர்கள்*


நேற்று (02.03.2002) அன்று காலமானார். அவரது இறுதி வைபவம் அவரது சகோதரியின் சங்குவேலி இல்லத்தில் நேற்று (02.03.2002) சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

அன்னார் எமது தேவஸ்தானத்தில் ஆற்றிய பணிகளை நினைந்து, அவரது மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்கை அம்பாளை வேண்டுதல் செய்கிறோம்.

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

[4767]

## சிறுவர்களின் மீது ஆயுத மோதலின் தாக்கம்



கோடிக்கணக்கான சிறுவர்கள் ஒரு துப்பாக்கியை ஒரு போதும் கண்டிராத போதிலும், அவர்கள் யுத்தங்களினால் துன்பப்படுகிறார்கள்.

அபிவிருத்தியில் முதலீடு செய்யக் கூடிய வளங்கள் ஆயுத உற்பத்தியிலும் கொள்வனவிலும் திசை திருப்பப்படுகின்றன. இதனால் அநேகமான யுத்தங்கள் அவற்றை நிகழ்த்துவதற்கு ஆகக் குறைந்த அளவிலேனும் நிதி வளமற்ற நாடுகளிலேயே நடக்கின்றன என்பது எமது காலத்தில் துன்பகரமான யதார்த்தங்களுள் ஒன்றாக இருக்கிறது.

ஆயுத மோதலானது சிறுவர்களின் உடல் ரீதியான, உள ரீதியான, உணர்வு ரீதியான வளர்ச்சியின் எல்லா அம்சங்களையும் பாதிக்கின்றது.

க. செந்தூரன்
4ம் வருட மருத்துவ மாணவன்

*உங்கள் தொடர்புகட்கான எங்கள் முகவரி:*

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
021 - 2261 Ext 274

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) அனுசரணையுடன் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு

## மரண அறிவித்தல்

### திருமதி. சின்னத்தம்பி உமையம்மா

வரம்பைக்குறிச்சி, வரணியை பிறப்பிடமாவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சின்னத்தம்பி உமையம்மா 28.02.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு, அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், யோகலட்சுமி, தனலட்சுமி (லண்டன்), கமலாவதி (வவுனியா), சத்தியதர்மகுலசீலன் (வன்னி), சத்தியகுணபாலன் (லண்டன்), சத்தியசீலன், லீலாவதி (நந்தா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார் (அப்புச்சி), ரகுநாதன் (லண்டன்), சிதம்பரப்பிள்ளை (வவுனியா), லீலா (வன்னி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2002) ஞாயிற்றுக்கிழமை 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சத்தியசீலன்
(மகன்)

154/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[C/3623]

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அ[illegible]களது அச்சகத்தில் 03.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.